BUDGET
2026



சிங்கப்பூரின்
அடுத்தக்கட்டத்தை உறுதிசெய்தல்

# வளர்ச்சியும் தரமான வேலை வாய்ப்புகளும்





> அனைத்திற்கும் மேல், மாற்றங்களுக்கு ஏற்பத் தகவமைத்துக்கொள்ளும் தன்னம்பிக்கையை ஊழியர்களுக்கும், போட்டியிடும் திறனாற்றலைத் தொழில்களுக்கும், நம் வளர்ச்சியிலும் வருங்காலத்திலும் ஒரு கடப்பாட்டை ஒவ்வொரு சிங்கப்பூரருக்கும் அளிப்பதே நமது உத்தி.
>
> — துணைப் பிரதமர் மற்றும் வர்த்தக, தொழில் அமைச்சர் திரு கான் கிம் யோங்.

# CONTENT




தொழில்களுக்கான ஆதரவு
பக்கங்கள் 3–4





முக்கியத் துறைகளில் முன்னிலை வகித்து, புதிய வாய்ப்புகளைக் கண்டறிதல்
பக்கங்கள் 6–7





தொழில்நிறுவனச் சூழலை வலுப்படுத்துதல்
பக்கங்கள் 8–9





செயற்கை நுண்ணறிவுத் துறையில் சிங்கப்பூரை ஒரு முன்னணி நாடாக நிலைநிறுத்துதல்
பக்கங்கள் 10–11





மையமாக வலுப்பெற்று, அனைத்துலகமயமாதலை ஆதரித்தல்
பக்கங்கள் 12–13





பயனுள்ள வளங்கள்
பக்கம் 14

# வர்த்தகங்களுக்கான ஆதரவு



## ஏன் முக்கியம்?

புவிசார் அரசியல் நிலைத்தன்மையின்மை, தொழில்நுட்ப இடையூறுகள், மேலும் கடுமையான வளத் தட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு மத்தியில், தற்போதைய சவால்களைச் சமாளிக்கவும் நீண்டகால வளர்ச்சிக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும் அரசாங்கம் தொழில்களுக்கு உதவும்.

## தொழில் செலவுகளைச் சமாளித்தல்

- 2026 மதிப்பீட்டு ஆண்டிற்கான நிறுவன வருமான வரித் தள்ளுபடி 50%
  - ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அதிகபட்சம் $40,000
  - 2025இல் குறைந்தபட்சம் உள்ளூர் ஊழியர் ஒருவரைக் கொண்டு செயல்படும் நிறுவனங்களுக்குக் குறைந்தபட்சம் $2000
  - மத்திய கிழக்கில் மாறிவரும் சூழலின் தாக்கத்தின் அடிப்படையில் ஏப்ரல் 7ஆம் தேதி இது புதுப்பிக்கப்பட்டது

## வளர்ச்சியை ஆதரித்து, முன்னெடுத்துச் செல்லுதல்

- 2026ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியிலிருந்து, 'எட்ஜ்' (EDGE) மானியத் திட்டம், தற்போதுள்ள மூன்று மானியங்களை – சந்தை ஆயத்தநிலை உதவி (MRA) மானியம், உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம் (PSG), தொழில்நிறுவன மேம்பாட்டு மானியம் (EDG) – ஒரே திட்டமாக ஒருங்கிணைக்கும். இத்திட்டத்தின்கீழ், சிங்கப்பூர் நிறுவனங்களுக்குத் தகுதியுள்ள செயல்பாடுகளின் பேரில், ஆண்டுக்கு $100,000 வரையிலான நிதியுதவி வழங்கப்படும்
- தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டம் வர்த்தகக் கடன் (EFS-TL), தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டம் சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்களுக்கான நிலையான சொத்துக் கடன் (EFS-FA), ஆகியவை குறுகியகால வர்த்தக வசதிகளைப் பெறவும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள நிலையான சொத்து முதலீடுகளுக்கான நிதியைப் பெறவும் வழிவகுக்கும்
- மேம்படுத்தப்பட்ட காட்சி விற்பனைத் திட்டம் (EVM), பொது ஈடுபாட்டை ஊக்குவிக்கும் குடியிருப்பு வட்டாரத் தொழில்நிறுனங்களுக்கான மானியம் (HEPG) ஆகியவை அளிக்கும் ஆதரவு 50 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காட்டிற்கு அதிகரிக்கப்படும். குடியிருப்பு வட்டாரக் கடைகள் தங்கள் அங்காடிகளைப் புதுப்பிக்கவும், மக்களை ஈர்க்கவல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இவை உதவும்

## வெளிநாட்டு விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தல்

- சந்தை ஆயத்தநிலை உதவி மானியம், தொழில் தகவமைப்பு மானியம் (BizAdapt), உலகளாவியப் புத்தாக்கக் கூட்டணி (GIA) ஆகியவற்றின்கீழ், வெளிநாடுகளில் விரிவாக்கம் செய்யும் நிறுவனங்களுக்கான ஆதரவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி தகுதிபெறும் செலவுகளில், சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்களுக்கு 70 விழுக்காடு வரையிலும், இதர நிறுவனங்களுக்கு 50 விழுக்காடு வரையிலும் நிதியுதவி வழங்கப்படும்
- புதிய சந்தைகளில் நுழைவதற்கு மட்டுமல்லாமல், ஏற்கனவே உள்ள வெளிநாட்டுச் சந்தைகளில் தங்களது வணிகத்தைப் பலப்படுத்துவதற்கும் சந்தை ஆயத்தநிலை உதவி (MRA) மானியம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது
  - சந்தை ஆயத்தநிலை உதவி மானியம், "எட்ஜ்' (EDGE) மானியத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்படும்போது, 2026ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியிலிருந்து இவை நடப்புக்கு வரும்
- சிங்கப்பூர் நிறுவனங்கள் எளிதாகவும் விரைவாகவும் வெளிநாடுகளில் தடம் பதிக்க உதவும் வகையில், 'அனைத்துலகமயமாக்கத்திற்கான இரட்டை வரிக் கழிவு' (DTDi) திட்டத்தின்கீழ், தானாகவே கோரப்படும் கோரிக்கைகளுக்கான (Automatic Claims) உச்சவரம்பு 2027 மதிப்பீட்டு ஆண்டு முதல் $150,000லிருந்து $400,000ஆக உயர்த்தப்படும்

## உற்பத்தித்திறனையும் செயற்றிறனையும் மேம்படுத்துதல்

- சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்களுக்கு $1,000 வரையிலும், பெரிய தொழில்களுக்கு $5,000 வரையிலும் ரொக்க மானியம் வழங்கப்படும். சிங்கப்பூரின் மின்கட்டணக் கட்டமைப்பான InvoiceNow திட்டத்திற்கு மாறுவதை எளிதாக்கவும் அதனை முன்கூட்டியே பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும் இது உதவும்
  - பொருள், சேவை வரித் திட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பெற்ற அனைத்துத் தொழில்களும், ஏப்ரல் 2031க்குள் InvoiceNow மூலம் தங்களது மின்கட்டண விலைப்பட்டியல்களைச் (Digital Invoices) சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்
  - சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் InvoiceNow அங்கீகாரம் பெற்ற குறிப்பிட்ட சில மென்பொருள்களை இலவசமாகப் பயன்படுத்தலாம்
- எரிசக்தி ஆற்றலை மிச்சப்படுத்தும் சாதனங்களில் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்காக, **எரிசக்தி சிக்கனத்திறன் மானியம் (EEG)** அடிப்படை நிலை எல்லாத் துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்; மார்ச் 2028 வரை நீட்டிக்கப்படும்
  - மத்திய கிழக்கில் மாறிவரும் சூழலின் தாக்கத்தின் அடிப்படையில் ஏப்ரல் 7ஆம் தேதி இது புதுப்பிக்கப்பட்டது

## அரசாங்கக் கொள்முதல் வாய்ப்புகளை எளிதாக்குதல்

- ஏப்ரல் 2026 முதல், தகவல், தொடர்புத் தொழில்நுட்ப ஒப்பந்தங்களுக்கும் Tender Lite விரிவுபடுத்தப்படும்
  - 'Tender Lite' என்பது, ஒரு மில்லியன் வெள்ளி வரையிலான மதிப்புடைய கொள்முதல்களுக்கான எளிமைப்படுத்தப்பட்ட அரசாங்க ஏலக்குத்தகை தெரிவுமுறை ஆகும்

## ஊழியரணியை மேம்படுத்துதல்

- செயற்கை நுண்ணறிவுத் திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஆதரவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, **தொழில்நுட்பத்துறைத் திறன்பயிற்சி, வேலை அமர்வுத் திட்டம் (TeSA)** தொழில்நுட்பம் சாராத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படும். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு பயிற்சித் திட்டங்களில் பங்கேற்கும் சிங்கப்பூரர்களுக்கு, முதன்மையான செயற்கை நுண்ணறிவு வளங்களை இலவசமாகப் பயன்படுத்தும் வசதி ஆறு மாதத்திற்கு வழங்கப்படும்
- பணியிடைக்கால ஊழியர்களுக்கான ஆதரவை வலுப்படுத்த, **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (SFLP)**, தொழில்துறைக்கு மேலும் உகந்த பயிற்சித் திட்டங்கள் சேர்க்கப்படும்; மூத்த **ஊழியர்களுக்கான வேலை நியமன உதவித்தொகை (SEC)** 2027ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்படும்
- குறைந்த வருமானம் பெறும் ஊழியர்களை மேம்படுத்தும் பொருட்டு **படிப்படியாக உயரும் சம்பள உதவித்தொகைத் திட்டம் (PWCS)** 2028 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது
  - 2026ஆம் ஆண்டில் சம்பள உயர்வுக்கான அரசாங்கத்தின் இணைநிதி ஆதரவு 20 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது
  - 2027 முதல், தகுதிபெறுவதற்கான குறைந்தபட்ச சம்பள உயர்வு $100லிருந்து $200ஆக உயர்த்தப்படும்



# எண்ணும் எழுத்தும்



## 50%

2026 மதிப்பீட்டு ஆண்டிற்கான நிறுவன வருமான வரித் தள்ளுபடி, அதிகபட்சம் $40,000



## 30%

படிப்படியாக உயரும் சம்பள உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் (PWCS), குறைந்த வருமான ஊழியர்களுக்கு 2026ஆம் ஆண்டில் வழங்கப்படும் சம்பள உயர்வுகளுக்கான அரசாங்கத்தின் இணை நிதி ஆதரவு அதிகரிக்கிறது

## $400,000

அனைத்துலகமயமாக்கத்திற்கான இரட்டை வரிக் கழிவு (DTDi) திட்டத்தின் கீழ், 2027 மதிப்பீட்டு ஆண்டு முதல் தானாகவே கோரப்படும் கோரிக்கைகளுக்கான (Automatic Claims) செலவுத்தொகையின் உச்சவரம்பு

டிபிஎஸ் வங்கியின் நிறுவன, சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்களுக்கான குழுமத் தலைவர் சென் ஸே லிங்:

**இன்றைய சூழலில் தொழில்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சார்ந்தவை அல்ல – கட்டமைப்பு சார்ந்தவை என்பதை இந்த வரவுசெலவுத் திட்டம் அங்கீகரிக்கிறது. சந்தைப் பிளவு, தொழில்நுட்ப இடையூறு ஆகியவற்றால் சித்திரிக்கப்பட்டுள்ள உலகளாவியச் சூழலில் நாம் இயங்கி வருகிறோம்.**[1]


டிலாய்ட் சிங்கப்பூர் (Deloitte Singapore) நிறுவனத்தின் மேலாளர் ஷாரிக் பர்மாக்கி

**தொழில்முறைச் சேவைத் துறையில் நடைமுறை சார்ந்த செயற்கை நுண்ணறிவுத் திறன்களை உருவாக்குவதில் அரசாங்கம் வழங்கும் ஆதரவு, ஓர் உத்திபூர்வ அணுகுமுறை. இது தொழில்முறைச் சேவைகளுக்கான உலகளாவிய முன்னணி நடுவமாகச் சிங்கப்பூரின் நிலையை மேலும் வலுப்படுத்தும். இதன்மூலம், நம்மால் புத்தாக்கமும் திறன் மேம்பாடும் நிறைந்த துடிப்பானதொரு சூழலைத் தொடர்ந்து உருவாக்குவதோடு, ஆசியாவிற்கும் உலகிற்கும் சேவை செய்வதில் சிங்கப்பூரை நிலைநாட்டமுடியும்.**[2]

*மேற்கோள்:* [1] Budget 2026 repositions SMEs for long-term tough environment: DBS, The Business Times

[2] Deloitte Singapore's response to the Singapore Budget 2026: "Securing Our Future Together in a Changed World?"

# முக்கியத் துறைகளில் முன்னிலை வகித்து, புதிய வாய்ப்புகளைக் கண்டறிதல்



## ஏன் முக்கியம்?

பகுதி மின்கடத்தி போன்ற முக்கியத் துறைகளில் முன்னிலை வகிக்கவும், Quantum தொழில்நுட்பம், கரிம வெளிப்பாட்டை குறைத்தல், விண்வெளித் தொழில்நுட்பம் போன்ற புதிய துறைகளில் விரிவடையவும் நாம் தொழில்களுடன் இணைந்து, அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவோம். இதன் மூலம், நாம் அடுத்தகட்ட வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதோடு, தரமான வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவோம்.

## மேம்பட்ட உற்பத்தித்துறையில் முன்னிலையை விரிவுபடுத்துதல்

- ஆய்வு, புத்தாக்கம், தொழில்முனைப்பு திட்டத்தின்கீழ் பகுதி மின்கடத்தித் துறைக்காக $800 மில்லியன் முதலீடு செய்யப்படும். இம்முதலீடு உயர் மதிப்புள்ள பொருள்களை உருவாக்கவும், மேம்பட்ட ஆய்வு, வளர்ச்சி, உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளவும் உதவும்
    - அதிநவீன பொட்டலமிடுதல், மற்றும் அதிநவீன ஃபொடொனிக்ஸ் (ஒளிசார் அணுக்களைக் கொண்டு, தரவுகளை முறைமைப்படுத்துதல்) போன்ற அதிக பயன்விளைவு மிகுந்த அம்சங்களில் கவனம் செலுத்தப்படும்
- அடுத்த தலைமுறை அதிநவீன மின்னியல் (Power Electronics) துறையில் (தரவு நிலையங்கள், மின்சார வாகனங்கள் போன்ற துறைகளுக்குத் தேவையான, அதிக மின்னழுத்தத்தைக் கையாளும் திறனும் வெப்பத்தைத் தாங்கும் ஆற்றலும் கொண்ட மேம்பட்ட பகுதி மின்கடத்திகள்) சிங்கப்பூரின் போட்டித்தன்மையை வலுப்படுத்துவதற்காக, தேசிய பகுதி மின்கடத்தி உருமாற்ற, புத்தாக்க நிலையத்தில் (NSTIC) $60 மில்லியன் முதலீடு செய்யப்படும்

## தொழில் புத்தாக்கத்தை ஆதரித்தல்

- நிறுவனங்களுக்கான ஆய்வு, புத்தாக்கத் திட்டத்தின்கீழ் RIS(C) $3 பில்லியனுக்கும் அதிகமாக முதலீடு செய்யப்படும். ஆய்வு, புத்தாக்கம், தொழில்முனைப்பு 2030 திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆராய்ச்சி, புத்தாக்கம் ஆகியவற்றில் தனியார் முதலீடுகளை ஈர்க்கவும், நிறுவனங்களின் திறனாற்றல்களை வளர்க்கவும், உள்ளூர்வாசிகளுக்கு உயர் மதிப்புடைய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இது உதவும்


## நம்பகத்தன்மை அடிப்படையிலான சேவை மையமாக உருவெடுத்தல்

- நம்பகத்தன்மை அடிப்படையிலான சேவை மையமாகச் சிங்கப்பூரை மேம்படுத்தி, இடர் ஆலோசனைகள், இணையப்பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு உறுதிப்பாடு, சோதனை, கண்காணிப்பு, சான்றளிப்பு போன்ற துறைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்கும்

## புதிய வளர்ச்சித் துறைகளில் விரிவாக்கம் செய்தல்

- குறைந்த கரிம ஆற்றல் உற்பத்தியையும் கரிம வெளிப்பாட்டைக் குறைக்கும் தொழில்துறைத் தொழில்நுட்பங்களையும் துரிதப்படுத்த, $800 மில்லியன் மதிப்பிலான 'கரியமில வாயுவைக் குறைப்பதற்கான மாபெரும் சவால்' திட்டம் தொடங்கப்படும். இது மின்சார, தொழில்துறைத் துறைகள் 2035ஆம் ஆண்டு உமிழ்வு குறைப்பு இலக்குகளையும், 2050ஆம் ஆண்டு நிகர பூஜ்ஜிய இலக்கையும் எட்ட உதவும்
    - உள்ளூர் ஆய்வு, வளர்ச்சி, நடைமுறைச் சோதனைகள் ஆகியவற்றுக்கு ஆதரவளித்து, நம்பிக்கையளிக்கும் ஆரம்பகட்டத் தொழில்நுட்பங்களை விரிவுபடுத்துவதற்கான தனியார் முதலீடுகளை ஈர்க்க, 'எரிசக்தி, தொழில்நிறுவன கரிம வெளிப்பாட்டைக் குறைக்கும் சிங்கப்பூர் முன்னோடித் திட்டம்' துவங்கப்பட்டுள்ளது
- புதிதாக நிறுவப்பெற்றுள்ள சிங்கப்பூர்த் தேசிய விண்வெளி அமைப்பின் (NSAS) மூலம் உலகளாவிய விண்வெளிப் பொருளாதார வாய்ப்புகளைக் கைப்பற்றுவது, அடுத்த மூவாண்டில் இந்த அமைப்பின் மனிதவள எண்ணிக்கை இரட்டிப்பாக்கும் (தற்போது 30 ஊழியர்கள் உள்ளனர்)

## எண்ணும் எழுத்தும்



# $3 பில்லியன்

ஆய்வு, புத்தாக்கம், தொழில்முனைப்பு முதன்மைத் திட்டங்கள் (முக்கியப் பொருளாதாரத் துறைகளுக்கு), ஆய்வு, புத்தாக்கம், தொழில்முனைப்பின் மாபெரும் சவால்கள் (தேசிய உத்திபூர்வ முன்னுரிமைகளுக்கு) ஆகியவற்றுக்காக அடுத்த ஐந்தாண்டில் ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க நிதி[1]

# $14 பில்லியன்

கடந்த ஐந்தாண்டில், ஆய்வு, புத்தாக்க முதலீடுகளுக்காக நிறுவனங்கள் அளித்துள்ள கடப்பாடு



# 18.5%

2025ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தித்துறையின் பங்களிப்பு[2]

மேற்கோள்: [1] Singapore invests S$37 billion in RIE2030 research plan; semiconductors, ageing among focus areas, Singapore Economic Development Board
[2] Singapore Economy, Department of Statistics Singapore

சிங்கப்பூர்ப் பொருளியல் வளர்ச்சிக் கழகத்தின் உலகளாவியத் தொழில்நிறுவனப் பிரிவுக்கான துணைத் தலைவர் சூ ஹா யூன்:

**அம்பிக் (Ambiq) போன்ற நிறுவனங்களின் தொழில்நுட்பப் புரட்சிகளுக்கும் புதிய மதிப்பீடுகளை உருவாக்கும் முயற்சிகளுக்கும் ஆதரவளிக்கும் வகையில், சிங்கப்பூர் தமது புத்தாக்கச் சூழலை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.[1]**

EY தொழில் ஊக்குவிப்பு ஆலோசனைப் பங்காளி, ட்ரேசி தாம்:

**“சிங்கப்பூரின் ‘ஆய்வு, புத்தாக்கம், தொழில்முனைப்பு 2030’ திட்டத்தின்கீழ், ஐந்தாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள $37 பில்லியன் மதிப்பில் முன்மொழியப்பட்ட முதலீடு, ஆராய்ச்சிக்கும் புத்தாக்கத்திற்குமான குறிப்பிடத்தக்க கடப்பாடு. இதுவரை மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில், இதுவே ஆக உயர்ந்ததாகும். முன்னணித் தொழில்நுட்பங்களை உருவாக்கி, சோதித்து, வணிகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதில் சிங்கப்பூரின் லட்சியத்தை இது உலகிற்குத் தெளிவாக உணர்த்துகிறது.[2]**

மேற்கோள்: [1] Semiconductor firm Ambiq to expand R&D in Singapore, eyes 30 specialised tech hires, The Business Times
[2] EY reactions to Singapore Budget 2026

# தொழில்நிறுவனச் சூழலை வலுப்படுத்துதல்



### ஏன் முக்கியம்?

துடிப்பான ஆற்றல்மிக்க தொழில்நிறுவனச் சூழல், உலகளாவியத் தொழில்களுக்குச் சிங்கப்பூரை நம்பகமான தளமாய் மேலும் வலுப்படுத்தும். இது நமது பொருளாதாரம் புத்தாக்கத்திலும் வளர்ச்சியிலும் தொடர்ந்து முன்னணியில் இருப்பதை உறுதிசெய்யும்.

## புதிய உலகளாவிய நிறுவனங்களை வளர்த்தெடுத்தல்

- சிங்கப்பூரில் உயர்தரமான நிறுவனங்களை (Listings) ஈர்த்து நிலைபெறச் செய்ய, 'Anchor Fund' திட்டத்தின் இரண்டாவது தவணைக்காலத்தில் $1.5 பில்லியன் நிதி
- தொழில்நிறுவன நிதியாதரவுத் திட்டம் – இணைப்புகள் & பற்றுமானங்கள்' (EFS-M&A) நிரந்தரமாக விரிவாக்கம் செய்யப்படும். இது சிங்கப்பூர் நிறுவனங்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இணைப்பு, பற்றுமான நடவடிக்கைகளுக்கான நிதியுதவியைப் பெறுவதற்கு ஆதரவு அளிக்கும்

## துடிப்பான புது நிறுவனச் சமூகத்தை வளர்த்தெடுத்தல்

- புதிய நிறுவனங்களுக்கான எஸ்ஜி இணை முதலீடு (SSGE) திட்டத்திற்கு $1 பில்லியன் நிரப்புத்தொகை அளிக்கப்படும். இது ஆரம்பகட்டத்தில் உள்ள ஆழ்நிலைத் தொழில்நுட்ப நிறுவனங்களில் தொடர்ந்து முதலீடு, அவை வளர்ச்சி நிலையில் விரிவாக்கம் காண்பதற்குத் துணைபுரியும்
- ஒன்-நார்த் பகுதியில் அமைந்துள்ள 'LaunchPad' தளம் விரிவுபடுத்தப்பட்டு புதுப்பிக்கப்படும். இதில் புதிய நிகழ்ச்சி வளாகங்கள், விளையாட்டு வசதிகள், நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பையும் சமூகக் கட்டமைப்பையும் மேம்படுத்தும் பகுதிகள் ஆகியவை அமைக்கப்படும்
- ஜூரோங் நகராண்மைக் கழகம், நாடு முழுதும் புதிய நிறுவனங்களுக்காக வழங்கும் இடவசதிகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில், பொங்கோல் மின்னிலக்க வட்டாரத்தில் 'LaunchPad' தளத்தை நிறுவவுள்ளது
  - சமூகத்தோடு ஒன்றிணைந்து செயல்படும் வகையில் அமையவிருக்கும் 'LaunchPad @ பொங்கோல் மின்னிலக்க வட்டாரம்', அறிவார்ந்த நகர்ப்புறத் தீர்வுகள், நிதித் தொழில்நுட்பம், இயந்திரவியல், இணையப்பாதுகாப்பு ஆகியவை தொடர்பிலான புத்தாக்கங்களைச் சோதனை செய்து பார்ப்பதற்கான வழிவகைகளை புதிய நிறுவனங்களுக்கு அளிக்கும்

## எண்ணும் எழுத்தும்




# $1.5 பில்லியன்

சிங்கப்பூரில் உயர்தரமான நிறுவனங்களை ஈர்த்து, நிலைபெறச் செய்வதற்கான 'Anchor Fund' திட்டத்தின் இரண்டாவது தவணைக்காலத்திற்காக ஒதுக்கப்படும் நிதித்தொகை

# $14.2 பில்லியன்

2025ஆம் ஆண்டில் சிங்கப்பூர் ஈர்த்த நிலையான சொத்து முதலீடுகளின் மதிப்பு [1]

# 44.9%

ஏப்ரல் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை சிங்கப்பூரின் புதுத்தொழில் சூழல் கண்ட வளர்ச்சி [2]



மேற்கோள்: [1] Singapore Economic Development Board Year 2025 in Review
[2] Startup Blink's Global Startup Ecosystem Index 2025

EY ஆசியா, சிங்கப்பூர் பங்குச்சந்தைத் தலைவர் சான் யூ கியாங்:

**Anchor Fund திட்டத்திற்கு அளிக்கப்பெறும் கூடுதல் நிதி, சிங்கப்பூரைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் வேகமாக வளர்ந்துவரும் நிறுவனங்களை ஈர்ப்பதில், சிங்கப்பூரின் போட்டித்தன்மையை மேம்படுத்தக்கூடும். இருப்பினும், இந்தச் சந்தை எப்போதும் மாற்றங்களுக்கு உட்பட்டது. இதில் நிலைத்திருப்பதற்கு நிறுவனங்கள் நிலைத்திருக்க வேகமான வளர்ச்சியும் லாபமும் மிகவும் முக்கியம்.**

PwC சிங்கப்பூர் நிறுவனத்தின் வர்த்தக வரிப் பங்காளி கெக்சின் லிம்:

**உயர்தரத் தொழில்முனைவர்களை ஈர்ப்பதற்காக சிங்கப்பூர் தற்போது செயல்படுத்திவரும் திட்டங்களுடன், ஆரம்பகட்ட நிறுவனங்களுக்கும் வளர்ந்துவரும் நிறுவனங்களுக்குமான ஆதரவு விரிவுபடுத்தப்படுகிறது. இது புதிய நிறுவங்களுக்கான கட்டமைப்பை வலுப்படுத்துவதோடு, தொழில் விரிவாக்கத்திற்கான முன்னணி மையமாக சிங்கப்பூரின் நிலையை மீள்வலியுறுத்துகிறது.**

மேற்கோள்: Budget 2026: Quick takes on EQDP top-up, support for startups, The Business Times

# AI துறையில் சிங்கப்பூரை ஒரு முன்னணி நாடாக நிலைநிறுத்துதல்

## ஏன் முக்கியம்?


நிறுவனங்கள் தங்களது உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், திறனாற்றல்களை மேம்படுத்தவும், புத்தாக்கத்தை முன்பைக் காட்டிலும் வேகமாக விரிவுபடுத்தவும் செயற்கை நுண்ணறிவு (AI) ஒரு முக்கியக் கருவியாகத் துணைபுரிகின்றது. செயற்கை நுண்ணறிவுத் தீர்வுகளை உருவாக்கவும், மெய்ப்பிக்கவும், விரிவுபடுத்தப்படுத்தவும் உகந்த இடமாகச் சிங்கப்பூர் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும்.

## செயற்கை நுண்ணறிவுசார் தலைமைத்துவத்தை நிலைநாட்டுதல்

- மேம்பட்ட உற்பத்தி, தொடர்பு, நிதி, சுகாதாரப் பராமரிப்பு ஆகிய நான்கு முன்னுரிமைத் துறைகளில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த உருமாற்றத்தை முன்னெடுத்துச் செல்ல, தேசிய அளவிலான **செயற்கை நுண்ணறிவு இலக்குகளை** வகுத்தல்
- **மேம்பட்ட உற்பத்தி தொடர்பிலான செயற்கை நுண்ணறிவு இலக்கு** மூன்று முக்கியக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அமையப்பெறும்:
  - செயற்கை நுண்ணறிவு, இயந்திரவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கொண்டு நமது உற்பத்தி வசதிகளை மேலும் அதிகமான மீள்திறனும் ஆற்றலும் கொண்டவையாக மாற்றியமைத்தல்
  - செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி, பொருள் வடிவமைப்பை மேம்படுத்துதல், தயாரிப்புச் செயல்முறைகளைத் துரிதப்படுத்துதல் ஆகியவற்றின்மூலம் உலகத் தரம் வாய்ந்த முன்னணித் தீர்வுகளை உருவாக்குதல்
  - நிறுவனங்களின் முக்கியச் செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி, துறைசார் தீர்வுகளை அமல்படுத்த நிறுவனங்களுக்கு உதவும் வகையில், பரந்துபட்ட உருமாற்ற முன்னெடுப்புகளைத் துறைதோறும் வழிநடத்துதல்
- **மேம்பட்ட உற்பத்தி தொடர்பிலான செயற்கை நுண்ணறிவு இலக்கு** இரண்டு முக்கிய அம்சங்களால் ஆதரிக்கப்படும்
  - அறிவியல், தொழில்நுட்ப ஆய்வு அமைப்பின் **உற்பத்தித் துறைசார் செயற்கை நுண்ணறிவுக்கான உன்னத நிலையம் (AIMfg)**, நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தீர்வுகளை உருவாக்கி, பயன்படுத்தவதை ஆதரிக்கும்
  - இயந்திர மனிதக் கருவிகள், ஆளில்லா வானூர்திகள் போன்றவற்றில் செயற்கை நுண்ணறிவை **ஒருங்கிணைக்கும் செயற்கை நுண்ணறிவு தொடர்பிலான ஆய்வு, வளர்ச்சியில்** முதலீடு
- சிங்கப்பூரின் செயற்கை நுண்ணறிவு மையமாக விளங்கவிருக்கும் **'கம்போங் ஏஐ' (Kampong AI)** துவங்கப்படும். வேலையிடங்களையும் வசிப்பிடங்களையும் ஒரே இடத்தில் கொண்டிருக்கக்கூடிய புதிய நிறுவனங்களுக்கான சிங்கப்பூரின் முதல் ஒருங்கிணைந்த சமூகமாக அது அமையும்

## செயற்கை நுண்ணறிவு உருமாற்றத்திற்கு ஆற்றலளித்தல்

- உற்பத்தித்திறன், புத்தாக்கம், வருவாய் வளர்ச்சி ஆகியவற்றின் முக்கிய உந்துசக்தியாகச் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்த கடப்பாடு கொண்டுள்ள முன்னணி சிங்கப்பூர் நிறுவனங்களிடையே செயற்கை நுண்ணறிவு சார்ந்த உருமாற்றத்தை துரிதப்படுத்த **செயற்கை நுண்ணறிவு ஆர்வலர்** திட்டம் துவக்கம்
- விரிவுபடுத்தப்பட்ட **தொழில்நிறுவனப் புத்தாக்கத் திட்டம் (EIS)**, தகுதிபெறும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த செலவினத்தில் ஆண்டுக்கு $50,000 வரையிலான தொகைக்கு 400% வரிக் கழிவு வழங்கும் மதிப்பீட்டு ஆண்டு 2027, 2028
- மேலும் அதிகமான செயற்கை நுண்ணறிவு சார்ந்த தீர்வுகளை உள்ளடக்க, **உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம் (PSG)** விரிவாக்கம்



# எண்ணும் எழுத்தும்



## 28

உற்பத்தித் துறைசார் செயற்கை நுண்ணறிவுக்கான உன்னத நிலையத்தோடு (AIMfg) இணைந்து, செயற்கை நுண்ணறிவு சார்ந்த தீர்வுகளை உருவாக்கி, அவற்றைச் செயல்படுத்தியுள்ள நிறுவனங்கள்

## 14,500 sqm

70 நிறுவனங்கள், நிகழ்ச்சி வளாகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கவல்ல ‘கம்போங் ஏஐ’ வளாகத்தின் பரப்பளவு

## $50,000




தொழில்நிறுவனப் புத்தாக்கத் திட்டத்தின்கீழ் (EIS), 2027 மற்றும் 2028 மதிப்பீட்டு ஆண்டுக்கு ஆண்டு ஒன்றுக்குப் பெறக்கூடிய அதிகபட்சத் தொகை - செயற்கை நுண்ணறிவு சார்ந்த செலவினத் தொகை

“

கேரசெல் நிறுவனத்தின் இணை நிறுவனரும், தொழில்முனைப்புக்கான சமூகத்தின் துணைத் தலைவருமான மார்கஸ் டான்:

**உலகை சுழற்சி முறையிலான ஒரு பொருளாதாரமாக மேலும் மாற்ற, நாம் செயற்கை நுண்ணறிவில் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறோம். அவ்வகையில், சிங்கப்பூரில் உலகத் தரம் வாய்ந்த செயற்கை நுண்ணறிவுத் திறனாற்றல்களை வளர்க்கவேண்டும் என்ற எங்களின் நோக்கமும், ‘கம்போங் ஏஐ’ வளாகத்திற்கான ஜூரோங் நகராண்மைக் கழகத்தின் தொலைநோக்குப் பார்வையும் மிகச் சிறப்பாக ஒத்துப்போகின்றன. இந்தத் துடிப்பான சமூகத்தில் உள்ள அனைத்துலகத் தலைவர்களோடும் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த செயற்கை நுண்ணறிவுசார் புதிய நிறுவனங்களோடும் எங்களது எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம்.**[1]

“


டிபிஎஸ் வங்கியின் மூத்த பொருளாதார நிபுணர் சுவா ஹான் டெங்:

**சிங்கப்பூரின் முதிர்ச்சியடைந்த பொருளாதாரம், நில, மனிதவளத் தட்டுப்பாடுகளை அதிகளவில் எதிர்கொள்ளும் வேளையில், ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திலும் செயற்கை நுண்ணறிவைப் பயன்மிக்க முறையில் கையாளுவது உற்பத்தித்திறனை மேம்படுத்தும். இதுவே அடுத்த பத்தாண்டுக்கான போட்டித்தன்மை, வளர்ச்சி ஆகியவற்றுக்கான முக்கிய உந்துசக்தியாக அமையும்.**[2]

மேற்கோள்: [1] JTC unveils refreshed masterplan for LaunchPad, including Kampong AI in LaunchPad @ One-North, Singapore’s Hub and Home for AI

[2] AI emerges as cornerstone of Singapore’s new economic playbook, The Business Times

# மையமாக வலுப்பெற்று, அனைத்துலகமயமாதலை ஆதரித்தல்



## ஏன் முக்கியம்?

சிறிய உள்நாட்டுச் சந்தையைக் கொண்டுள்ள சிங்கப்பூர், சுற்றுலாப் பயணிகளுக்கும் முதலீட்டாளர்களுக்கும் தொடர்ந்து ஏற்புடைத்தன்மையும் ஈர்ப்புத்தன்மையும் கொண்ட நாடாக இருக்கவேண்டும். உலகளாவிய விநியோகத் தொடர் மறுசீரமைக்கப்படும் வேளையில், நம் தொழில்நிறுவனங்கள் வெளிநாடுகளில் உள்ள வாய்ப்புகளைக் கைப்பற்ற அது மிகவும் முக்கியம்.

## சுற்றுலாத் துறையை வலுப்படுத்துதல்

- **செந்தோசா பெருந்திட்டத்தின்** (Greater Sentosa Master Plan) முதற்கட்டத்தில், செந்தோசாவின் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும்
  - செந்தோசா தீவையும் பிரானி தீவையும் (Pulau Brani) இணைக்கும் புதிய போக்குவரத்து மையம், வாழ்வியல், விருந்தோம்பல் வசதிகளுடன்
- வருகையாளர்களைத் தொடர்ந்து கவரும் வகையில், ஆர்ச்சர்ட் சாலை புதுப்பிக்கப்படும். இதன் ஒரு பகுதியாக, **37 எமரால்ட் ஹில்**, அதன் வளமான மரபுடைமையை அங்கீகரிக்கும் வகையில், தனித்துவமான தங்கும் விடுதிகள், வாழ்வியல் அம்சங்கள், சமூக பொது வளாகங்கள் கொண்ட பல்வகைப் பயன்பாடுகளைக் கொண்ட இடமாக உருமாற்றம் காணும்

## ஜோகூர்-சிங்கப்பூர் சிறப்புப் பொருளியல் வட்டாரத்தில் உள்ள வாய்ப்புகளைக் கண்டறிதல்

- 35 ஹெக்டர் வரையிலான பரப்பளவில் அமையவுள்ள **உட்லண்ட்ஸ் கேட்வே (Woodlands Gateway)** பகுதியானது, பல்வகைப் பயன்பாட்டு வட்டாரமாக மேம்படுத்தப்படும். இது ஜோகூர்-சிங்கப்பூர் சிறப்புப் பொருளியல் வட்டாரத்திற்கான (JS-SEZ) நமது வடக்கு வாயிலாகத் திகழும். இத்திட்டம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்:
  - ஜோகூர் பாரு சிங்கப்பூர் விரைவு ரயில் கட்டமைப்பையும் உட்லண்ட்ஸ் நார்த் பெருவிரைவு ரயில் நிலையத்தையும் இணைக்கும் புதிய போக்குவரத்து மையம்
  - சிங்கப்பூரைத் தலைமையகமாகவும், ஜோகூரில் உற்பத்திச் செயல்பாடுகளையும் கொண்டிருக்கவல்ல நிறுவனங்களுக்கான நெகிழ்வுத்தன்மையுடன் கூடிய தொழில்துறை வளாகங்கள்
  - அருகில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கும் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் பயனளிக்கும் வர்த்த, வாழ்வியல் வசதிகள்

  இத்திட்டத்தின் முதல் கட்டம், 2030ஆம் ஆண்டு வாக்கில் முழுமையடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உலகளாவியப் பங்காளித்துவத்தை விரிவுபடுத்துதல்

- அமெரிக்கா, சீனா, இந்தியா, ஆசியான் போன்ற முக்கியப் பங்காளிகளுடன் பொருளாதார உறவுகளை ஆழப்படுத்திக்கொள்ளுதல்
- லத்தீன் அமெரிக்கா, தெற்காசியா, மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா போன்ற வளர்ந்துவரும் சந்தைகளில் புதிய பொருளாதார வாய்ப்புகளைக் கண்டறிதல்
- சிறிய, நடுத்தர, வர்த்தகம் சார்ந்திருக்கும் பிற நாடுகளுடன் இணைந்து, **‘வர்த்தக, முதலீட்டுப் பங்காளித்துவத்தின் வருங்காலம்’ (FIT)** திட்டம் துவங்கப்பட்டுள்ளது. சவால்களுக்குத் தீர்வு காணவும், முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறியவும் இத்திட்டம் துணைபுரியும்

# எண்ணும் எழுத்தும்



## $23.9 பில்லியன்

2025ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டில் சிங்கப்பூரின் பயணத்துறை வருவாய் சாதனை அளவு [1]

## 82%

'DBS Business Pulse Check' கருத்தாய்வில் பங்கேற்ற 730 நிறுவனங்களில், புதிய வாடிக்கையாளர்களைச் சென்றடையவும், வெளிநாடுகளில் வலுவான முத்திரையைப் பதிக்கவும் 2026ஆம் ஆண்டில் அனைத்துலகமயமாவதற்கான திட்டங்களைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்த நிறுவனங்கள் [2]



*மேற்கோள்:* [1] [Singapore Tourism Board]
[2] [DBS Business Pulse Check Survey 2026]

PwC சிங்கப்பூர் நிறுவனத்தின் தொழில்முனைப்பு, தனியார் வர்த்தகப் பிரிவுக்கான தலைவர் டேவிட் டோ:

**“மேம்படுத்தப்பட்ட மானியங்கள், நிதி, செயல்பாட்டுத் தடைகளைக் குறைத்து வெளிநாட்டுச் சந்தைகளில் நீண்டகால கடப்பாட்டை ஊக்குவிக்கின்றன. மேலும், சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் உலகளவில் போட்டியிடும்போது எதிர்கொள்ளும் எதார்த்தங்களையும் அவை ஈடுசெய்கின்றன. இதன்மூலம், சிங்கப்பூர்த் தொழில்நிறுவனங்கள் அனைத்துலக வளர்ச்சியைத் தங்களின் அடுத்தகட்ட இலக்காகக் கொண்டு செயல்பட அவை வழிவகுக்கின்றன.**

*மேற்கோள்:* [Budget 2026: Tax rebate and enhanced grants for firms to deal with competition, costs, The Straits Times]

# பயனுள்ள வளங்கள்

**மேல்விவரங்களுக்கு, பின்வரும் இணையத்தளங்களை நாடுங்கள், அல்லது mti_email@mti.gov.sg என்ற மின்னஞ்சல்வழி, வர்த்தக, தொழில்துறை அமைச்சைத் தொடர்புகொள்ளுங்கள்.**

## GoBusiness இணையவாசல்

நிறுவனங்களுக்கான ஆதரவுத் திட்டங்கள் குறித்த கூடுதல் தகவல்களைப் பெற, gobusiness.gov.sg என்ற முகவரியில் GoBusiness இணையவாசலை நாடுங்கள்.

எளிய கேள்விகள் சிலவற்றுக்குப் பதிலளிப்பதன்மூலம், திட்டங்களுக்கான உங்கள் தகுதியுடைமையைச் சரிபார்க்க, Government Assistance e-Adviser வசதியைப் பயன்படுத்துங்கள்.

## சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவன நிலையங்கள்

அனுபவம் வாய்ந்த தொழில் ஆலோசகர்கள், உங்கள் தொழிலை மேம்படுத்துவதற்கான தனிப்பட்ட ஆலோசனைகள், திறன் மேம்பாட்டுப் பயிலரங்குகள், குழு அடிப்படையிலான மேம்பாட்டுத் திட்டப்பணிகள் ஆகியவற்றைக் கொண்டு உங்களுக்கு ஆதரவளிப்பர்.

உங்களுக்கு விருப்பமான சிறிய, நடுத்தரத் தொழில்நிறுன நிலையத்தில் இலவச ஆலோசனையைப் பெற enterprisesg.gov.sg/about-us/contact-us/sme-centres என்ற இணையத்தளத்தில் முன்பதிவுசெய்துகொள்ளுங்கள்.

## நிதி அமைச்சின் தொழில்நிறுவன ஆதரவுத் திட்டங்கள்

அரசாங்கக் கொள்முதல் தொட்டு விலைப்பட்டியல் வரையிலான நடைமுறைகள் எளிமைப்படுத்தபட்டுள்ளது பற்றியும், தொழில்கள் 'InvoiceNow' முறையைப் பயன்படுத்துவதற்கான இடைக்கால ஆதரவு பற்றியும் தெரிந்துகொள்ளுங்கள்.

நிதி அமைச்சின் தொழில்நிறுவன ஆதரவுத் திட்டங்கள் குறித்து go.gov.sg/mof-cos-2026 என்ற முகவரியில் மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

MTI MINISTRY OF TRADE AND INDUSTRY SINGAPORE

